2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடங்கள் உபயோகிக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். அப்படியிருந்தால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, அலுவலர்கள் மூலமாகவும், துறை ரீதியாகவும் அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் அந்த மருந்தகம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 15 வரை)@

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 16)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

முற்பகல் 11–30

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கி மத்திய அரசின் அனுமதி பெற்று 1860 ஆம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டத்தில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வருதல் குறித்த சமூக நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

@ *257 முதல் 1598 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *1598 முதல் 1669 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

[2020 செப்டம்பர் 16

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலம் பேணி, அவர்களின் உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதிபடுத்தப் பல்வேறு முன்னோடித் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் பாலின விகித மேம்பாட்டினை உறுதி செய்வதற்காகப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்; பெண் சிசுக்கொலையை ஒழிக்க, தொட்டில் குழந்தைத் திட்டம்; பெண்கள் உயர் கல்வி கற்க ஊக்குவிக்கவும், ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்காக உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்; ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு அரசு சேவை இல்லங்கள்; பணிபுரியும் மகளிர் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு மானியம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழித்திடும் வகையிலும், முன்னோடியாக, 1992 ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு (Crime Against Women and Children Unit) ஒரு முன்னோடித் திட்டமாக 6–3–2019 முதல் தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறாமல் தடுத்து, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் கண்காணிப்புப் பிரிவு (IUCAW),

2020 செப்டம்பர் 16] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வரதட்சணை தடுப்புப் பிரிவு, சிறப்பு சிறார் காவல் பிரிவு (SJU), குழந்தைக் கடத்தல் தடுப்புப் பிரிவு (ACTU) ஆகிய அலகுகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 35 அனைத்து காவல் நிலையங்களுக்கும் நவீன வசதிகள் பொருத்திய ஊர்திகள், நிர்பயா நிதியின்கீழ் வழங்கப்பட்ட அம்மா ரோந்து வாகனம்மூலம் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றின் வாயிலாக பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான குற்றச் செயல்கள் தடுக்கப்பட்டு வருவதுடன், அவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் மற்றும் குழந்தைத் திருமணம் ஆகியவற்றைத் தடுக்க விழிப்புணர்வுப் பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் (Goondas Act) கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

அதுமட்டுமின்றி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098 போன்றவையும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, குற்றங்கள் வெகுவாக தடுக்கப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பினை மேலும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, 1860 ஆம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட மத்திய அரசின் அனுமதி பெற்று கீழ்க்கண்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கும்:

1. பிரிவு 304–B இல் வரதட்சணைத் தொடர்பான மரணங்களுக்குத் தற்போது வழங்கப்படும் குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையை, குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் தண்டனையாக வழங்குதல்; (மேசையைத் தட்டும் ஒலி)

2. பிரிவு 354–B இல் குற்ற நோக்கத்துடன் (பெண்களின் ஆடைகளைக் களைதல்) செயல்படுவதற்குத் தற்போது வழங்கப்படும் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையை, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாகவும், அதிகபட்சமாக வழங்கப்படும் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையைக் கடுமையாக்கி பத்தாண்டுகளாகவும் வழங்குதல்; (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 செப்டம்பர் 16

3. பிரிவு 354–D இல் தவறான குற்ற நோக்கத்துடன் பெண்களைப் பின்தொடர்ந்தால், இரண்டாம் முறையும், தொடர்ந்து குற்றமிழைத்தால் தற்போது வழங்கப்படும் ஐந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையை அதிகபட்சமாக ஏழு ஆண்டுகளாக்கவும்;

4. பிரிவு 372 இல் பாலியல் தொழிலுக்காக 18 வயதுக்குட்பட்ட நபர்களை விற்பனை செய்தல் மற்றும் பிரிவு 373 இல் பாலியல் தொழிலுக்காக 18 வயதுக்குட்பட்ட நபர்களை விலைக்கு வாங்குதல், தற்போது வழங்கப்படும் அதிகபட்சமான பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனைக்குப் பதிலாக, குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அதிகபட்சம் ஆயுள் தண்டனையும் வழங்குவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மாவின் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாகத் தொடர்ந்து நின்று அவர்களைக் காக்கும் என உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

(ஆ) திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய பல்கலைக்கழகம் உருவாக்குதல் குறித்த உயர் கல்வித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்-இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற பாடல் வரிகளுக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் உயர் கல்வித் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல அரசு கலைக் கல்லூரிகளையும், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளையும், பொறியியல் கல்லூரிகளையும், பிற உயர் கல்வி நிறுவனங்களையும் துவக்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும், பல உயர் கல்வி நிறுவனங்களைத் தொடர்ந்து உருவாக்கியும், பல உயர் கல்வி நிறுவனங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்தியும் வருகிறது. இதன் காரணமாக,